



யாழ். வட்டுக்கோட்டை, அடைக்கலம் தோட்டம் "கோகுலம்" வாசம்

**வித்துவான், பிரம்மஸ்ரீ இ. பாலசுப்ரமணிய ஐயர்**

அவர்களின் துணைவியார்

**சாரதாம்பாள்**

அவர்களின்

# நினைவு மலர்

14.06.2015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டத்தை

வசிப்பிடமாகக் கொண்ட

அமரர்

# சாரதாம்பாள் பாலசுப்பிரமணிய ஐயர்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**14.06.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்

உற்றார், உறவினர்களுக்கு

உறுதுணையாய் கணவனுக்கு நல்ல

மனைவியாய் குடும்பத்தின்

ஒளி விளக்காய் ஒளிர்ந்து

ஒளிகொடுத்து அமரராகிவிட்ட

எம் அன்புத்தெய்வத்திற்கு

இம் மலரினை

காணிக்கையாக்குகின்றோம்.

பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்,
பெறாமகன்,
பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்,
தர்மகர்த்தா, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னை மடியில்
11.10.1928

இறைவன் திருவடியில்
05.06.2015

அமரர்

# திருமதி பா. சாரதாம்பாள்

அவர்கள்

## திதிவெண்பா

ஆண்டு மன்மத வருடமதில் வைகாசித்திங்கள்
பூண்ட சங்கடஹர சதுர்த்தி - தினமதில்
குணக்குன்றாம் அம்மா சாரதாம்பாள் பார்விடுத்து
ஈசன் பாதம் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமுறைப் பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

## குருவந்தனம்

*குருர் பிரம்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேஸ்வரஹ*
*குரு சாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ*

## விநாயகர் துதி

*அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றிற் பிறந்த*
*தொல்லை போம் போகாத் துயரம் போம் - நல்ல*
*குணமதிக மாமருணைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்*
*கணபதியைக் கைதொழுதக் கால்.*

## தேவாரம்

*அங்கமும்வேதமும் ஓதும்நாவர் அந்தணர்நாளும் அடிபரவ*
*மங்குல் மதிதவழ் மாடவீதி மருகனிலாவிய மைந்த சொல்லாய்*
*செங்கயலார்புனல் செல்வமல்கும் சீர்கொள்செங்காட்டம்*
*குடியதனுள்*
*கங்குல்விளங்கெரி யேந்தியாடும் கணபதீச்சரங் காமுறவே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமானந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித்திரு நகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவியே
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சத்தருள்வது மொருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத்தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புகை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரி : ஓம்

## திருவாய் மொழி

கண்ணன் கழலினை
தண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே.

## பெரிய திருமொழி

தாயே தந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும்
நோயேபட்டொழிந்தே னுன்னைக்காண்பதோராசையினால்
வேயேய்பூம் பொழில்சூழ் விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக் கொண்டருளே

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படு துயர் ஆயின எல்லாம்
நிலம் தரும் செய்யும் நீள் விசும்பு அருளும்
அருளொடு பெரு நிலம் அளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

சக்கரத்து அண்ணலே! என்று தாழ்ந்து கண்ணீர் ததும்ப
பக்கம் நோக்கி நின்று அலந்தேன் பாவியேன் காண்கின்றிலேன்
மிக்க ஞான மூர்த்தி ஆயவேத விளக்கினை என்
தக்க ஞானக் கண்களாலே கண்டு தழுவுவனே.

நின்னருளால் கதியின்றி மற்றொன்றில்லேன்
நெடுங்காலம் பிழை செய்த நிலைகழிந்தேன்
உன்னருளுக்கினிதான நிலையுகந்தேன்
உன்சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்றநிலை யெனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தே னுன்னை
இன்னருளா லினியெனக்கோர் பரமேற்றாமல்
என் திருமால்! அடைக்கலங்கொள் என்னைநீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பாவை

சிற்றம் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து, உன்
பொற்றாமரைஅடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்தநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாதே
இற்றைப்பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேல் ஓர் எம்பாவாய்!

## திருநெடுந்தாண்டகம்

மின்னுருவாய் முன்னுருவில் வேதநான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள்தானாய்
பின்னுருவாய் முன்னுருவில் பிணிமூப்பில்லாப்
பிறப்பிலியா யிறப்பதற்கேயெண்ணாது எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் பூதமைந்தாய்ப்
புனலுருவா யனருவில் திகழுஞ்சோதி
தன்னுருவா யென்னுருவில் நின்றவெந்தை
தளிர்புரையும் திருவடியென் தலைமேலவே.

## ஸ்ரீ திருப்புராணம்

சரணமேன் றடைந்த பேர்க்குள்
சரணமே கொடுத்து நீங்கா
மரணமும் பிறப்பு நீக்கி
வண்டொடு திகிரி நல்கு
யரணமாய் வைகுந் தத்தை
யளித்து வெம் பகைய தான
முரணெலாங் கெடுக்கும் ஆழி
முகுந்தனே போற்றி போற்றி.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம்**
**வித்துவான் திரு. இ. பாலசுப்பிரமணிய ஐயர்**
**அவர்களது மனைவியார்**

# திருமதி சாரதாம்பாள் அம்மாவின்

# *வாழ்க்கை வரலாறு*

தமிழ்நாடு ஸ்ரீ வைகுண்டம் பிரம்மஸ்ரீ ச. நாராணயக் குருக்கள் தம்பதியரின் புதல்வியான சாரதாம்பாள் அம்மா இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களைத் திருமணம் செய்தார்.

பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் வட்டுக் கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்றவர். பின்னர் உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்றார். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று வித்துவான் பட்டம் பெற்றார். சமஸ்கிருத மொழியில் சிறப்புப் பட்டம் பெற்று கலைமாணிப் பட்டம் பெற்றவராவார். பட்டப்படிப்பின் பின்னர் 1947ஆம் ஆண்டு முதல் 1950ஆம் ஆண்டு வரை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து 1951ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தர வகுப்புகளுக்குக் கற்பித்தார்.

சமய அனுஷ்டானங்களில் வழிபாடுகளில் மிக்க நம்பிக்கை கொண்ட இவர்கள் கண்ணபிரானிடத்தில் பேரன்பு கொண்டு வாழ்ந்து வந்தனர். இவர்கள் ஸ்ரீதரன் என்னும் புத்திரனையும் சாந்தா என்னும் புத்திரியையும் பெற்று மகிழ்ந்திருந்தனர்.

சாரதாம்பாள் அம்மா அவர்கள் கணவருக்கு உறுதுணையாக அமைந்து இறைவழிபாடு போன்ற பல்வேறு துறைகளிலும் உதவிபுரிந்தார். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை, உறவினர்களை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து இனிய முகத்துடன் விருந்தளிப்பதில் ஆர்வமும் மகிழ்ச்சியும் அடைந்தார்.

இவர்களது மக்கள் இருவரும் கல்வியில் சிறப்புறப் பயின்று மகள் சாந்தா பட்டதாரி ஆசிரியராக யாழ்ப்பாணக் கல்லூரியில் பணிபுரிந்தார். மகன் ஸ்ரீதரன் கணக்குப் பதிவாளராக கொழும்பில் பணிபுரிந்தார். ஸ்ரீதரன் என்பவருக்கு வாழ்க்கைத்துணைவியாக பா. ஜெயலட்சுமி என்பவரும், சாந்தா என்பவருக்கு வாழ்க்கைத் துணைவராக க.யசோதரன் என்பவரும் வாய்க்கப்பெற்றனர். யசோதரன் அவர்கள் கங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தொழில் புரிந்தார்.

ஸ்ரீதரன் என்பவருக்கு கோதாலக்ஷ்மி, சாருஸ்மிதா என்னும் இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர். இவர்களும் பட்டப்படிப்பு முடித்து தொழில் புரிந்து வருகின்றனர். சாந்தா என்பவருக்கு சுதர்சனன், சுந்தர்ராம், ஸ்ரீவைஷ்ணவி என்னும் மூன்று பிள்ளைகள் உள்ளனர். அவர்களும் நன்கு கல்வி பயின்று தொழில் புரிந்து வருகின்றனர்.

சாரதாம்பாள் அம்மா அவர்கள் 05.06.2015 விடியல் ஒரு மணி 40 நிமிடங்களில் சதுர்த்தி நன்நாளில் எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைபதம் அடைந்தார்.

இவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

ஓம் சாந்தி.

– பா. ஸ்ரீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புப் பாட்டி

"செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க நம்மிடையே நடமாடும் தெய்வமாகத் திகழ்ந்தவர் பாட்டி. (திருமதி சாரதாம்பாள் பாலசுப்பிரமணிய ஐயர்) என்றால் மிகையன்று. பாட்டி தனது பேரப்பிள்ளைகளுக்கு மாத்திரம் பாட்டியல்ல. சிறுகுழந்தை முதல் வயோதிபர் வரை சாதி, சமய வேறுபாடின்றி எல்லோராலும் பாட்டி என்று அன்புடன் அழைக்கப் படுவார். பாட்டியிடம் யார் எந்த நேரத்திலும் சென்றாலும் அவரிடம் உணவு அருந்தாமல் வரமுடியாது. ஒருபிடியளவு உணவவாவது சாப்பிட வேண்டும். இல்லையென்றால் அவரது மனம் மிகவும் வாடிவிடும். வீட்டுக்கு வருகிறவர்களிடம்; சாப்பிட்டுவிட்டுப்போ என்று அன்புக் கட்டளையிடுவார். விருந்தினரை உபசரிப்பதில் பாட்டிக்கு நிகர் பாட்டியேதான். பாட்டியிடம் சாப்பாடு கொஞ்சமாக இருக்கிறதோ; எப்படி உணவளிப்பது என்று கேட்டால் அது எல்லாம் கண்ணன் தருவான் என்று சொல்லுவார்.

பாட்டி கண்ணனிடம் மிகுந்த பக்தி கொண்டவர். எந்நேரமும் கண்ணனின் சிந்தனையுடனேயே இருப்பார். பெரும்பாலும் இவர் கதைப்பதும் கண்ணனின் கதைகளாகவே இருக்கும், பாட்டி உலையில் அரிசி போடும்போது கூட, நாராயணா என்றுதான் சொல்லிக்கொண்டு போடுவார். நாங்கள் சமைக்கும்போது நல்ல சிந்தனைகளை நினைத்துக்கொண்டு சமைத்தால் அதைச் சாப்பிடுபவர்களுக்கும் நல்ல எண்ணமே வரும் என்று பாட்டி கூறுவார்.

பாட்டிக்கு நாலாயிரத்திவ்ய பிரபந்தம் அத்தனை பாடல்களுமே மனப்பாடம். மடைதிறந்த வெள்ளம் போல் அவை அவர் வாயில் இருந்து வெளிவரும். மார்கழி மாதம் பிறந்துவிட்டால் பாட்டியின் மனதில் உற்சாகம் வந்துவிடும். அந்த அதிகாலைப் பொழுதில் பனியையும் குளிரையும் பொருட்படுத்தாமல் எழுந்து நீராடி வாசலில் அழகான கோலங்கள் போட்டு அண்டாள் அருளிய திருப்பாவையை முழுவதும் பாடுவார். திருப்பாவைப் பாடல்களை மிகவும் அனுபவித்தே பக்தியோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராயணம் செய்வார். அவரும் ஆண்டாளாகவே மாறிவிடுவார். எங்களுடனும் திருப்பாவைப் பாடல்களின் சிறப்பைப் பகிர்ந்து கொள்வார். நெய் உண்ணோம், பாலுண்ணோம், கூந்தலை அள்ளி முடியோம், உண்ணா நீ எனக்கு காட்சி கொடுக்காவிட்டால் என்று ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாடலை அவர் எங்களுக்குச் சொல்லும் போது பாட்டி ஆண்டாளாகவே எம் கண்களுக்குத் தோன்றுவார்.

பாட்டி பதிபக்தியிலும் சிறந்தவர். தனது கணவரின் இறுதிக்காலம் வரையும் அவரின் தேவைகள் அனைத்தையும் மிகவும் அன்புடன் செய்து வந்தார். பாட்டியுடன் நாம் வாழ்ந்த காலம் ஒரு பொற்காலம். நாம் முற்பிறவியில் செய்த புண்ணியமே. பாட்டியின் தொடர்பு எமக்கு ஏற்பட்டது என்றால் அது மிகையன்று. அவரிடமிருந்து நாம் எவ்வளவோ நல்ல பழக்கங்களைக் கற்றுக்கொண்டோம். உன்னிடம் இரண்டு பொருட்கள் இருந்தால் அதில் ஒன்றை இல்லாதவர்கள் கேட்டால் மகிழ்வுடன் கொடுக்க வேண்டும். யாராவது துன்பப்பட்டால் எம்மால் இயன்ற உதவியை மனங்கோணாமல் செய்யவேண்டும். எவர் கஷ்டப்பட்டாலும் சாதி சமய வேறுபாடின்றி எம்மால் செய்யக்கூடிய உதவியைச் செய்யத் தயங்கக்கூடாது. இவை பாட்டியிடம் நாம் கற்றுக்கொண்ட பாடங்களாகும்.

பாட்டியைச் சந்தித்த விதம், பாட்டியுடன் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கை என்றுமே மறக்க முடியாத நிகழ்வுகள். மீண்டும் அவருடன் சேர்ந்து வாழும் பாக்கியம் எமக்குக் கிடைக்காதா என்று ஏங்க வைக்கும் பாட்டியின் அன்பு.

எங்கள் அன்புப் பாட்டியின் ஆத்மா சாந்தியடைய அவர் வணங்கும் கண்ணனைப் பிரார்த்திக்கின்றோம்.

– ராணி வைத்தீஸ்வரக்குருக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

அக்கா! உமை வட்டுக்கோட்டை
அக்கா, அக்கா என அழைப்போம்
மாதர் திலகமே உம் வதனம்
பிம்பம் போல் மனதில் பிரகாசிக்கிறது
குடும்ப குலவிளக்காய் எழிலுடன்
ஒளி கொடுத்து எமை
அன்புடனும் பண்புடனும்
நல்வழி காட்டி
இன்று படைத்தவன் திருவடி
நீழல் சென்றடைந்தீர்
நின் பாதம் போற்றுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ராணி அக்கா, குமார் அண்ணா.
வண்ணார்பண்ணை.

- மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரண தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வி.
- முதலில் கீழ்ப்படிதற்குக் கற்றுக்கொள். பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாகவே வந்து சேரும்.
- பிரமச்சரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கிற ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லாவிதமான கல்வி அறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தரின் அறிவுரைகள்

- கல்வி என்றால் என்ன?
  புத்தகங்களைப் படிப்பதா? இல்லை பலவிதமானவற்றைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின் மூலம் மன உறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு பயன்தரும் வகையில் அமைகின்றதோ அந்தப் பயிற்சிதான் கல்வியாகும்.

- ஒவ்வொருவரும் கட்டளை இடவே விரும்புகின்றனர். கீழ்ப்படிவதற்கு ஒருவரும் தயாராகவில்லை.

- மக்கட் பேற்றாலோ, செல்வத்தாலோ அல்ல; தியாகத்தில் மட்டுமே அமரநிலை அடைய முடிகின்றது.

- ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாடும் பெருமை அடைவதற்கு மூன்று விடயங்கள் அவசியம்.
  1. நன்மை தரக்கூடிய சக்திகளின் உறுதியான நம்பிக்கை.
  2. பொறாமையும் சந்தேகமும் இல்லாமல் இருத்தல்.
  3. நல்லவர்களாக இருக்கவும் நன்மை செய்யவும் முயற்சி செய்யும் அனைவருக்கும் உதவி புரிதல்.

- ஒருவருக்கு ஒருவர் கொடுப்பதும் வாங்குவதும் தான் இயற்கையில் உள்ள விதியாகும்.

- நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அதற்கு அர்ப்பணித்து விடு.

- உலகில் எதையும் அவர்களிடம் இருந்து நீ எதிர்பார்க்க முடியாது.

- நம்பிக்கையை இழந்துவிடாதே. பாதை, கத்தி முனையில் நடப்பதைப் போல் மிகவும் கடினமானது தான். எனினும் எழுந்திரு, விழித்துக்கொள். மனம் தளராதே. நீ அடைய வேண்டிய உனது இலட்சியமாகிய குறிக்கோளைக் கண்டுபிடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பெருந்தவறுகள்

உழைக்காமல் ஈட்டிய செல்வம்
மனச்சாட்சி இல்லாத இன்பம்
பண்பு இல்லாத அறிவு
நல்லொழுக்கம் இல்லாத வணிகம்
மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்
தியாகம் இல்லாத வணக்கம்
அடிப்படைக் கொள்கை இல்லாத அரசியல்.

— மகாத்மாகாந்தி.

# முக்கியமான இரண்டு

| | | |
|---|---|---|
| நம்முடன் வருவது இரண்டு | - | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது இரண்டு | - | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | - | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு | - | பந்தம், கோபம் |
| அழிவைத் தருவது இரண்டு | - | பொறாமை, கோபம் |
| வருவதும் போவதும் இரண்டு | - | இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதது இரண்டு | - | புகழ், பழி |
| போனால் வராதது இரண்டு | - | இளமை, மூப்பு |
| எல்லோருக்கும் பொதுவான இரண்டு | - | பிறப்பு, இறப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் நிறைந்த நன்றிகள்

எமது குடும்ப விளக்காய்த் திகழ்ந்து இறைபதமேய்திய அமரர் திருமதி சாரதாம்பாள் அம்மா அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய உறவினர்கள், நண்பர்கள், இறுதிக்கிரியைகளின் போது உதவி புரிந்த சகலருக்கும், நேரில் வரமுடியாத காரணத்தால் தொலைபேசி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், இம் மலரை அழகுற விரைவில் அச்சிட்டு உதவிய கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நன்றி**

இங்ஙனம்
*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்*

வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்—



Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org